தீர்மான எண். 377 அனுமதிக்கப்பட்டது

**நமக்கு நாமே திட்டம் (NNT) - 2022-2023**

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 07 ல் உள்ள ராஜா நகர் தெற்கு 1வது தெருவில் பாதாள சாக்கடை பிராதான குழாய் அமைத்தல் (089007R0410 | 3 .00 | திருமதி. ஜெயந்தி , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0. 63 % | குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திருமதி. ஜெயந்தி பெரம்பலூ மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| | | | ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.02% மதிப்பீட்டிற்கு அதிகம் | |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு திருமதி .ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.63%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.

5166/**2021**/ **இ1**

**27.04.2023**

**பொருள் 19:** இந்நகராட்சியின் நமக்கு நாமே திட்டம் ( NNT) 2022-23 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 14.03.2023 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**நமக்கு நாமே திட்டம் (NNT) - 2022-2023**

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **20** ல் உள்ள அபிராமபுரம் மேற்கு **5** வது குறுக்கு தெரு ( 089/020 R0861) பகுதியில் சிறுபாலம்அமைக்கும் பணி | 20 .00 | திருமதி. ஜெயந்தி , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| | | | ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் | |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு திருமதி .ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.15%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண். **378** அனுமதிக்கப்பட்டது

5166/**2021**/ **இ1**

**27.04.2023**

**பொருள் 20:** பெரம்பலூர் நகராட்சி **2022–2023** ஆம் ஆண்டில் வசூல் செய்யப்படவேண்டிய சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், பாதாளசாக்கடை இணைப்பு கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்க பொதுமக்கள் அறியும் வண்ணம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **21** வார்டு பகுதிகளிலும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் **265/2022** நாள் **30.12.2022**ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி பகுதியில் ஆட்டோ மூலம் விளம்பரம்செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் **08.02.2023**ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளியின் விவரம் | தொகை ரூநாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| **1.** | வீரம் ஆட்டோ அரணாரை, பெரம்பலூர் | ரூ.**2800/–** |
| **2.** | GPசாமிபயணியர் ஆட்டோ துறைமங்கலம், பெரம்பலூர். | ரூ.**2750/–** |
| **3.** | 7ஸ்டார் பயணியர்ஆட்டோ புதிய பேருந்து நிலையம், பெரம்பலூர். | ரூ.**2500/–** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

தீர்மான எண். **379** அனுமதிக்கப்பட்டது

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள

**7ஸ்டார் பயணியர்ஆட்டோ புதிய பேருந்து நிலையம் பெரம்பலூர்** என்பவரின்

குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

1. வரிவசூல் பணி அவசர அவசிய எம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலைஉத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.7030/2022/அ1

---

**27.04.2023**

**பொருள் 21 :** நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ப.தி) துறை அரசாணை (நிலை) எண்.71, நாள்.13.09.2021ல் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 8880 –2 /2022/P1 நாள். 06.03.2023 ன் படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொது மக்கள் விருப்பம் தெரிவித்ததின் பேரில், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 ல் உள்ள ஆசியா நகர் பகுதியில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பொது மக்களின் பங்களிப்பு தொகையாக மூன்றில் ஒரு பங்கு தொகை ரூ.0.70 இலட்சமும், மற்றும் வார்டு எண் 06 ல் உள்ள வெங்கடாஜலபதி நகர் ரோஸ் கார்டன் இணைப்பு சாலையில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு ரூ. 6.00 இலட்சமும் பொது மக்களின் பங்களிப்பு தொகையாக மூன்றில் ஒரு பங்கு தொகை ரூ. 2.00 இலட்சத்தினை பொது மக்கள் வரைவோலையாக செலுத்தியுள்ளனர் . நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி மன்ற தலைவர்களின் முன்அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு | தன்னார்வலர் பெயர் மற்றும் முகவரி | தன்னார்வலர் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 02 ல் உள்ள ஆசியா நகர் பகுதியில் பாதாள சாக்கடை | ரூ. 2.10 இலட்சம் | திரு. அமான் ஷெரீப் த/பெ சுல்தான் ஷெரீப் ஆசியா நகர் , | ரூ. 0. 70. இலட்சம் |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 06ல் உள்ள வெங்கடாஜலபதி நகர் ரோஸ் கார்டன் இணைப்பு சாலையில் | ரூ. 6.00 இலட்சம் | திரு. B. ரமேஷ் த/பெ பாதம் பிரியன், மேரிபுரம் , பெரம்பலூர் | ரூ. 2.00 இலட்சம் |

தீர்மான எண். 380 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | <u>**அலுவலகக்குறிப்பு**</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பித்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 5166 /2021/ இ1** | |
| **27.04.2023** | **பொருள் 22:** இந்நகராட்சியின் அனைத்து பிரிவு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் பிரிண்டர் டோனர்கள், அம்மா உணவக விற்பனைக்கு தேவையான டோக்கன்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்குரிய கணினி ரசீதுகள் போன்றவைகள் கொள்முதல் செய்வதற்கு 2022–2023–ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் **ரூ.10,00,000/–** க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண்.56/2022 நாள்.30.06.2022–ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பிப்ரவரி 2023 வரை **ரூ.6,65,572/–** செலவிப்பட்ட நிலையில் உரிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை **ரூ.4,16,643/–** நிலுவையில் உள்ளதால் கூடுதலாக **ரூ.2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.**<br>**5361/எச்1/2020** | தீர்மான எண். 381 அனுமதிக்கப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் 23 :** பெரம்பலூர் நகராட்சி 21 வார்டுகள் உள்ளடக்கிய 20.59 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியில் சொத்துவரி விதிப்பு எண்கள் 29000 அமைய பெற்றது. தற்பொழுது நகரம் மேலும், விரிவடைந்து வருவதால் பொதுமக்களின் நலன்கருதி மற்றும் கோரிக்கையின்படி நிலஅளவீடு செய்தல், புலப்படநகல் மற்றும் இதர சர்வே குறித்த பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நிலஅளவீடு துறையிலிருந்து நகராட்சிக்கு நகர சார்ஆய்வாளர் பணிக்கு ஒருவரை அயற்பணி (Deputation) புரிந்திட ஒதுக்கீடு செய்து தருமாறு வட்டாட்சியர் , நில அளவை பிரிவுக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>**அலுவலக குறிப்பு :**</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.6838/2022/எப்1 | தீர்மான எண். 382 அனுமதிக்கப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 24:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9 சமுதாய கூடம் அருகில் உள்ள மேற்குபகுதி சாலையில் உள்ள கழிவுநீர் வடிகால் கால்வாய்கள் உடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள | தீர்மான எண். 383 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு (ரூபாய். ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2127/ 2023<br>/இ1 | |
| **27.04.2023** | **பொருள் எண் 25:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 நிர்மலா நகர் பனிமலர் காலனியில் உள்ள சிறுபாலம் உடைந்த நிலையில் மண்கள் துகர்ந்து உள்ளதால் மழைகாலத்தில் மழைநீர் சிறுபாலத்தில் அடைப்பு ஏற்பட்டு ரோட்டின் மேல் செல்கிறது இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஒட்டிகள் ரோட்டில் செல்ல முடியாமல் அவதிபடுவதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு (ரூபாய். இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2128 / 2023<br>/இ1 | தீர்மான எண். 384 அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 26:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 16 அரணாரை பகுதியில் உள்ள அறிஞர் அண்ணா தெருவில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் உடைந்து முற்றிலும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் மழைக்காலத்தில் கழிவுநீர் செல்ல முடியாமல் அருகில் உள்ள வீடுகளில் நுழையும் நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 6.75 இலட்சத்திற்கு (ரூபாய். ஆறு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2129 / 2023<br>/இ1 | தீர்மான எண். 385 அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 27:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் உடைந்த நிலையில் உள்ளதால் மழைக்காலத்தில் கழிவுநீர் செல்ல முடியாமல் அருகில் உள்ள வீடுகளில் நுழையும் நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.25 இலட்சத்திற்கு (ரூபாய். ஒன்பது இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம். | தீர்மான எண். 386 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 2130/ 2023<br>/இ1 | |
| 27.04.2023 | **பொருள் எண் 28:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார் சிலை முதல் அருந்ததியர் தெரு வரை உள்ள கழிவுநீர் கால்வாய்கள் உடைந்த நிலையிலும் துகர்ந்த நிலையில் உள்ளதால் மழைக்காலத்தில் கழிவுநீர் செல்ல முடியாமல் ஆங்காங்கே தேக்கி நிற்பதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 7.60 இலட்சத்திற்கு ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2131 / 2023<br>/இ1 | தீர்மான எண். 387 அனுமதிக்கப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 29:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பால்ராஜ் மருத்துவமனை முதல் கம்பன் தெரு வரை உள்ள கழிவுநீர் கால்வாய்கள் சில இடங்களில் உடைந்த நிலையிலும் துகர்ந்த நிலையில் உள்ளதால் மழைக்காலத்தில் கழிவுநீர் செல்ல முடியாமல் ஆங்காங்கே தேக்கி நிற்பதால் பொதுமக்களின் நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு (ரூபாய். ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2132 / 2023<br>/இ1 | தீர்மான எண். 388 அனுமதிக்கப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 30 :** பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தினரால் புத்தக திருவிழா 2023 ஆண்டில் நடைபெறுவதற்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள திறந்த வெளி காலியிடத்தில் நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெரம்பலூர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 3591/2022/ப அ4 நாள். 09.03.2023 ன் படி உத்திரவிடப்பட்டு ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பகுதிகளை முழுவதும் JCB இயந்திரம் மூலம் முட்புதர்கள் செடிகள் போன்றவற்றை அகற்றி தூய்மை படுத்தி மண் மேடுகளை சமன் செய்யவேண்டும் எனவும் தற்காலிக கழிப்பிட வசதி ( Namma Toilet) யினை ஏற்படுத்தி தரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதியினை பொதுமக்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி பணிகளை செய்து முடிக்க தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் மட்டும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1949/2023 /இ1 | தீர்மான எண். 389 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 27.04.2023 | **பொருள் எண் 31 :** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த தார் சாலைகளை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள 2022-2023 – ம் ஆண்டு நிதியின் கீழ் ரூ. 44.35 இலட்ச மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ் கண்டவாறு சாலை பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | தீர்மான எண். 390 அனுமதிக்கப்பட்டது |

**General fund 2022-2023**

**LIST OF ROAD WORKS**

| Sl.No | Ward No | Unicode No | NAME OF WORK | Proposed Surface | Road Leddger | Width in M | Estimate cost Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | **10** | 089010R0509 | New Colony 1st cross street | **BT** | **219** | **4.20** | **44.35** |
| **2** | **10** | 089010R0519 | New Colony 12 th Cross | **BT** | **271** | **4.20** | |
| **3** | **12** | 089012R0823 | Kamban street ( Road) | **BT** | **295** | **4.20** | |
| **4** | **12** | 089012R0827 | kamban nagar 7 th cross street ( part) | **BT** | **64** | **4.20** | |
| 5 | **16** | 089016R0858 | Thiruvalluvar street - 2 | **BT** | **84** | **4.20** | |
| 6 | **16** | 089016R0859 | Thiruvalluvar main street - 2 , first cross street | **BT** | **107** | **4.20** | |
| | | | **Total** | | **104** | | |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி மேற்கண்டுள்ள பணிகளுக்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1948/2023/ இ1

| | | |
|---|---|---|
| 27.04.2023 | **பொருள் எண் 32:** பெரம்பலூர் நகராட்சியின் வார்டு எண் 1 முதல் 21 முடிய வார்டு பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகளில் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் செய்து முடிப்பதற்கு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி குடிநீர் ஆதாரங்களில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.90 இலட்சம் ( ரூபாய் நான்கு இலட்சத்தி தொன்னுரு ஆயிரம் மட்டும்) | தீர்மான எண். 391 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.002756/2023/ இ1 | |
| **27.04.2023** | **பொருள் எண் 33:** இந்நகராட்சியின் வார்டு எண் 14,16,17 18 மற்றும் 21 ஆகிய வார்டு பகுதியில் குடிநீர் விநியோக பணிக்காக அமைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் டேங்குகள் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி சின்டெக்ஸ் டேங்குகள் அப்புறப்படுத்தி புதியதாக 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்குகள் 5 எண்ணிக்கையில் பொருத்தும் பணிக்கு ரூ.65000/– (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் இப்பணிக்கு குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண். 2753/2023/ இ1 | தீர்மான எண். 392 அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 34:** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வார்டுகளிலும் குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் உடைப்பினை சரி செய்வதற்கு உதிரிபாங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதடைந்து உள்ளதை மாற்றி புதியதாக பொருத்துவதற்கு பணிகள் மேற்கொள்ளவும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதற்காகவும் பணிகள் மேற்கொள்ளவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.90 ( ரூபாய் நான்கு இலட்சத்தி தொன்னுரு ஆயிரம் மட்டும்) குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் இப்பணிக்கு குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண். 002754/2023/ இ1 | தீர்மான எண். 393 அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 35**: இந்நகராட்சியில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் உள்ளுர் குடிநீர் ஆதாரங்களின் மூலமாகவும் பெறப்படும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்காக குளோரினேசன் செய்து குடிநீர் விநியோகிப்படுகிறது. இப்பணிக்கு தேவையான திரவ குளோரின் தற்சமயம் இருப்பு குறைவாக உள்ளதால் தேவைக்கேற்ப அவ்வபோது கொள் முதல் செய்வதற்காக திரவகுளோரின் வாங்குவதற்கு மதிப்பீடு ரூ. 7.00 இலட்சம் ( ரூபாய் எழு இலட்சம் மட்டும்) குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க. எண்.002755 /2023/ இ1 | தீர்மான எண். 394 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| 27.04.2023 | **பொருள் எண் 36** : இந்நகராட்சியின் வார்டு எண் 12 எளம்பலூர் மெயின் ரோட்டில் உள்ள சர்க்கார் கிணற்றிலிருந்து ராம் தியேட்டர் எதிரில் உள்ள ஆண், பெண் கழிவறை மற்றும் அந்த பகுதிக்கு செல்லும் பழைய குடிநீர் குழாய் அடிக்கடிப பழுது ஏற்படுவதால் புதிய 3 PVC குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ. 2.50/- இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க. எண். 2759 /2023/ இ1 | தீர்மான எண். 395 அனுமதிக்க ப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 37** : பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரை உள்ள அனைத்து வார்டுகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க கடந்த 2013-2014 ஆம் ஆண்டு சோமண்டபுதூர் கிணற்றிலிருந்து குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ள இடம் திரு, அல்லாபிச்சை த/பெ அப்துல் கலிம் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் பெரம்பலூர் வடக்கு கிராம சர்வே எண் 56/1 , 1B, 1C, வழியே பதிக்கப்பட்டள்ளதால் மேற்படி இடத்தில் உள்ள குடிநீர் பிரதான குழாயினை அகற்ற வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 26893 /2014 ன்ப டி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்தியமைக்கும் எதிர் வாதுறை தாக்கல் செய்தமைக்கும் வழக்கு கட்டணமாக ரூ.25000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) அரசு வழக்கறிஞர் திரு. அபிஷேக் மூர்த்தி என்பவருக்கு செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. ஏனவே மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணத்தினை வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க. எண். 2328 /2023/ இ1 | தீர்மான எண். 396 அனுமதிக்க ப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 38** : தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84 (1) ல் தெரிவிக்கப்பட்டு விதிகளில் சொத்து உரிமையாளர்கள் தங்களது 2023–2024 ம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30–ஆம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்களுக்கு 5% தொகை தள்ளுபடி செய்யப்படும் என நகராட்சி நிர்வாக கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் 19.04.2023 அன்று நடைபெற்ற காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க பொதுமக்களுக்கு மேற்படி தகவலினை விளம்பரப்படுத்த வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.844/2023/அ2 , நாள்.20/04/2023 ன் படி தெரிவித்துள்ளார்கள். எனவே இப்பணிக்காக தினசரி நாளிதழ் விளம்பரம் / துண்டு பிரசுரங்கள் வழங்குதல் / பதாகைகள் மற்றும் விளம்பர பலகை அமைத்தல் / அலைபேசி மூலம் குறுத்தகவல்கள் அனுப்புதல் / ஒலிபெருக்கு ஆட்டோ விளம்பரம் செய்தல் துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு வழங்குதல் ஆகிய பணிகளை செய்ய வேண்டும் தெரிவித்துள்ளார்கள்.<br>மேற்கண்டுள்ளவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு விளம்பர செலவினமாக ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) தோராய செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** | தீர்மான எண். 397 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.**2682/2023/A1 | |
| **27.04.2023** | **பொருள் எண் 39**: இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை கழிவுகள் சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 121 பணியாளர்களை கடந்த **6** ஆண்டுகளாக M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின்மூலம் தினசரி **121** பணியாளர்களை வழங்கிட இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். **11002/2017/எச்1** நாள். **30.12.**2022-ன்படி அனுமதிக்கப்பட்ட அனுமதி காலம் **31.03.**2023-ல் முடிவடைகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகளின் கடிதம் ந.க.எண். 35295/2022/EA2-SWM-15, நாள்.**10.01.2023**-ன்படி திடக்கழிவுமேலாண்மை திட்ட பணியினை செயல்படுத்துவதற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து **24.03.2023** அன்று திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இந்நகரில் பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கும், இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதி தூய்மைப்பணிக்காக ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின்மூலம் பணியாளர்களை பெறவும், ஏற்கனவே அளிக்கப்பட்ட தினக்கூலி விலைவிகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் ஒரு மாத காலத்திற்கு **(01.04.2023** முதல் **30.04.2023** முடிய**)** ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பெற்று தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின் மூலம் பணியாளர்களை பெற்று தூய்மைப்பணி மேற்கொள்வதற்கும் மேற்படி பணிக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.**1650000/.** (பதினாறு இலட்சத்து ஐம்பதாயிராம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **01.04.2023** முதல் **30.04.2023** முடிய ஒரு மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்தின்மூலம் **121** பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 11002/எச்1/2017</u>** | தீர்மான எண். **398** அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 40** : இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை கழிவுகள் சேகரம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 110 பணியாளர்களை கடந்த **6** ஆண்டுகளாக M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின்மூலம் தினசரி **110** பணியாளர்களை வழங்கிட இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். **8934/2017/எச்1** நாள். **30.12.**2022-ன்படி அனுமதிக்கப்பட்ட அனுமதி காலம் **31.03.**2023-ல் முடிவடைகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகளின் கடிதம் ந.க.எண். 35295/2022/EA2-SWM-15, நாள்.**10.01.2023**-ன்படி திடக்கழிவுமேலாண்மை திட்ட பணியினை செயல்படுத்துவதற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து | தீர்மான எண். **399** அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **24.03.2023** அன்று திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இந்நகரில் பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கும், இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதி தூய்மைப்பணிக்காக ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின்மூலம் பணியாளர்களை பெறவும், ஏற்கனவே அளிக்கப்பட்ட தினக்கூலி விலைவிகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் ஒரு மாத காலத்திற்கு **(01.04.2023** முதல் **30.04.2023** முடிய**)** ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பெற்று தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி M/s.Our Land Engineering Works (Pvt) Ltd, நிறுவனத்தின் மூலம் பணியாளர்களை பெற்று தூய்மைப்பணி மேற்கொள்வதற்கும் மேற்படி பணிக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.**1500000/.** (பதினைந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **01.04.2023** முதல் **30.04.2023** முடிய ஒரு மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்தின்மூலம் **121** பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **8934**/எச்**1**/2017 | |
| **27.04.2023** | **பொருள் எண் 41** : பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினிகள் பிளிச்சிங்பவுடர் - 5000 கிலோ, சுண்ணாம்பு நீர் -10000 கிலோ, ஆசிட்- 60 லிட்டர், பினாயில்–100 லிட்டர், பிரஸ் - 20 எண்ணிக்கை உள்ள பொருட்கள் வாங்கி வழங்க கோரி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளார்கள் மேற்கண்ட பொருட்கள் பொது சுகாதாரத்திற்கு அவசியம் தேவைப்டுவதால் பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், உத்தேச செலவினத்தொகை ரூ.5,00,000/. இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம்) மேலும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 2669/2023/எச்1** | தீர்மான எண். 400 அனுமதிக்க ப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 42** : இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலை யோரங்களில் தள்ளுவண்டியில் காய்கறி,பழம்,உணவு மற்றும் பூ வியபாரம் செய்யும் வியபாரிகளுக்கு **15** நடமாடும் விற்பனை வண்டிகள் பெரம்பலூர் நகராட்சி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.**20789/2021**/UPA நாள்: **08.11.2022** ன் மூலம் வரப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மூலம் மேற்கண்ட பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது எனவும் அதற்கான விளம்பர கட்டணம் ரூ.**7500/–**யை செலுத்திட கோரி கடிதம் வரப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி விளம்பர கட்டணத் தொகை ரூ.**7500/–** யை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக கணக்கில் செலுத்திட மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு ;</u>**<br>**1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** பணியின் அவசரம் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் | தீர்மான எண். 401 அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்: 2240/2023/எப்1 | |
| **27.04.2023** | **பொருள் எண் 43** : பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **9** ல் உள்ள செல்வா நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் சரிவர வராத காரணத்தினால் சென்னை – திருச்சி பைபாஸ் சாலையின் குறுக்கே உள்ள பழுதடைந்த குழாயினை மாற்றி HDPE குழயாக மாற்றி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.**2.00**/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 002757 /2023/ இ1 | தீர்மான எண். 402 அனுமதிக்கப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 44** : பெரம்பலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண் **17** ல் உள்ள பெரியேரியில் அமைந்துள்ள திறந்த வெளி கிணற்றில் மின் அறைக்கு வரும் கேபிள் பழுதடைந்து இருப்பதால் கேபிளை மாற்றி மின் மோட்டார் அறை வரை பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.**1.50**/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 002758 /2023/ இ1 | தீர்மான எண். 403 அனுமதிக்கப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 45** : மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் **2023**-2024 ஆம் ஆண்டு சட்ட மன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாக மானிய கோரிக்கையின் போது பெரம்பமலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். எனவே பெரம்பலூர் நகராட்சி பேருந்து நிலையம் ( சர்வே எண் **333/3** B) பகுதியில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள மண் பரிசோதனை ( Soil Test) National Institute technology Trichy , கல்வி நிறுவனம் மூலம் மேற்கொள்ளுவதற்கும் கலந்தாலோசகர் மூலம் மதிப்பீடு தயார் செய்வதற்கும் இதர பணிகளுக்கும் கட்டணம் செலுத்தப்படவேண்டிள்ளது. அதற்கான தோராய செலவினம் ரூ.**345000**/- யை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2520 /2023/ இ1 | தீர்மான எண். 404 அனுமதிக்கப்பட்டது |
| **27.04.2023** | **பொருள் எண் 46** : இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் இலகுரக /கனராக வாகனங்களுக்கு 2023 - 2024 ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் **3** எண்ணிக்கை **(** TN 46 T **7617 ,** TN 46 T **3929**, TN **46** AB **9292)** மற்றும் குடிநீர் டேங்கர் லாரி **–1** TN **46** J 7292 ஆகிய நான்கு வாகனங்களுக்கு காப்பீடு பிரிமியம் செலுத்துதல் வாகனங்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் வாகனங்கள் தகுதி சான்று பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 350000/**–** ஐ (ரூபாய் இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். 405 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண். 2518/2023/இ1** | |
| 27.04.2023 | **பொருள் எண் 47** : இந்நகராட்சியில் இலகுரக ஈப்பு வாகனம் TN 46 T 7617 என்ற எண் கொண்ட வாகனத்திற்கு டைனமோ மின்மாற்றி பழுதடைந்து இருந்ததை சரி செய்வதற்கு சிவா ஆட்டோ மொபைல்ஸ் பெரம்பலூர் என்ற நிறுவனத்தின் மூலம் பழுது நீக்கம் பணி செய்து முடித்தமைக்கு பட்டியல் படி ரூ.6089 மட்டும் வழங்கிட பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே இப்பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2518/2023/இ1** | தீர்மான எண். 406 அனுமதிக்க ப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 48** : இந்நகராட்சியின் வார்டு எண் 19 ல் உள்ள சங்குபேட்டை அருகில் விளாமுத்தூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மின் கம்பம் மழை மற்றும் புயல் காரணமாக சேதமடைந்து கீழே விழுந்துள்ளது. எனவே மின் கம்பத்தை மாற்றி அமைக்க பதிவு கட்டணமாக ரூ.6050 க்கும் மின்கம்பம் மற்றும் கம்பி அமைப்பதற்கும் உத்தேச செலவினம் ரூ.100000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண். 2518/2023/இ1** | தீர்மான எண். 407 அனுமதிக்க ப்பட்டது |
| 27.04.2023 | **பொருள் எண் 49** : இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு சாலைவரி, பசுமைவரி மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ஆகியவை 2023-2024-ம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் பெரம்பலூர் அவர்களுக்கு செலுத்துவதற்கும் மேலும் வாகனகாப்பீட்டு பிரிமியம் (Insurance) ஆகியவை செலுத்தப்படவேண்டியுள்ளது. எனவே மேற்கண்டுள்ளவாறு கட்டணங்கள் செலுத்துவதற்கு தோராயமாக ரூ. 6,00,000/– (ஆறு இலட்சம்) மட்டும் செலவினம் ஏற்படும் என்பதால் மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2241/2023 /H1** | தீர்மான எண். 408 அனுமதிக்க ப்பட்டது |

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**

நகர்மன்ற தலைவர்
பெரம்பலூர் நகராட்சி

**// உண்மை நகல்//**

**ஆணையாளர் (பொ)**
**பெரம்பலூர் நகராட்சி**